# இராஜபாளையம் ராஜூக்கள் கல்லூரி

இராஜபாளையம்.

# சஞ்சீவி

## இருபது ஆண்டு நிறைவு மலர்

1993-94

Scanned with CamScanner

நல் வாழ்த்துக்கள் :

"சுமை ரொம்பத் தோன்றத் தோன்ற
நீங்கள் மேலே
ஏறிக்கொண்டிருக்கிறீர்கள்
என்று பொருள்"

நவபாரத் வித்யா பவன்
நவபாரத் மெட்ரிக்குலேஷன் ஸ்கூல்
நவபாரத் கல்வி அறக்கட்டளை
இராஜபாளையம்-626117

NAVA BHARATH MATRICULATION SCHOOL
RAJAPALAYAM.

மேலாண்மை :

**P. D.** கேசவ ராஜா
**Dr. N. M.** அழகேச ராஜா
**N. P.** நாராயண ராஜா

Scanned with CamScanner

# இதழுரை

இராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி 1973ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கடந்த இருபதாண்டு காலமாகச் சிறப்பான கல்விப் பணியாற்றி வருகின்றது. இருபதாண்டு நிறைவையொட்டி மலர் ஒன்றினை வெளியிட எண்ணியதின் விளைவாக இம்மலர் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. இம் மலருக்கு அழகும் மணமும் சேர்க்கப் படைப்புக்களை வழங்கிய ஆசிரியப் பெருமக்களுக்கும், மாணவர்களுக்கும் மலர் ஆசிரியர் குழுவின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வணிகப் பெருமக்களும் கல்லூரி வளர்ச்சியில் நாட்டம் கொண்டோரும் மனமுவந்து வழங்கிய விளம்பரங்கள் இம்மலர் மலர உதவின. விளம்பரங்களும், வாழ்த்துக்களும் வழங்கிய அனைவருக்கும் எங்கள் நன்றியை உரித்தாக்குகின்றோம். மலரைச் சிறப்பாக வடிவமைத்து, உரிய காலத்தில் அச்சேற்றி வெளியிட உதவிய ஸ்ரீ வேல்-முருகன் அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்க் குழுவினர்.


Scanned with CamScanner

## மலர்க் குழு

| | | |
|---|---|---|
| புரவலர்-முதல்வர் | : | ஏ.பெ. இராமச்சந்திரன் |
| இதழாசிரியர் | : | R. தாமோதரன் |
| உறுப்பினர்கள் | : | R. நாராயணன் |
| | | B. சதாசிவன் |
| | | A. V. ஸ்ரீநிவாசன் |
| | | G. ராதாகிருஷ்ணன் |
| | | V. வெங்கட்ராமன் |

Scanned with CamScanner

# OUR COLLEGE



Scanned with CamScanner

# இராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி
# இராஜபாளையம்

கல்லூரி அறிக்கை (1993 - 94) 20ம் ஆண்டு

முப்பெரும் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வந்திருக்கும் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் டாக்டர் ராஜன் அவர்களே! கல்லூரி ஆட்சிக்குழுத் தலைவர் திரு. ஏ. ஏ. சுப்பராஜா அவர்களே! செயலாளர்; திரு. என். ஆர். சுப்பிரமணிய ராஜா அவர்களே! அழைப்பினை ஏற்று விழாவிற்கு வருகை தந்திருக்கும் விருந்தினர்களே! கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் ஆசிரியர், அலுவலக, நண்பர்களே! மாணவச் செல்வங்களே! எல்லோரையும் இதயம் குளிர வரவேற்று, நம் கல்லூரியின் 20ம் ஆண்டு அறிக்கையை உங்கள் முன் அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆசிரியர், அலுவலர் :

நம் கல்லூரியில் 47 ஆசிரியர்களும் 27 அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர். அவர்களுள் ஆங்கிலத்துறையைச் சார்ந்த திரு. சுரேஷ் தலியத், வரலாற்றுத் துறையைச் சார்ந்த திரு. ரவிச்சந்திரன் ஆகியோரை அறிவொளி இயக்கப் பணிக்காக அனுப்பியுள்ளோம். அவர்கட்குப் பதிலாக தற்காலிகமாக திரு. இரவிக்குமார் என்பவரை ஆங்கிலத் துறையிலும், திரு. ரமேஷ் என்பவரை வரலாற்றுத் துறையிலும் கல்லூரி ஆட்சிக்குழு நியமனம் செய்துள்ளது. இந்தக் கல்வி ஆண்டில் வரலாற்றுத் துறையைச் சார்ந்த திரு பி சந்திரசேகரன் திரு. வெங்கட்டராமன் திரு வெங்கடேஷ்வரன் ஆகியோரையும். கணிதத்துறையைச் சார்ந்த திரு. அந்தோணி தேவசகாயம் என்பவரையும் நமது நிர்வாகத்தினர் Refresher Course க்கு அனுப்பியுள்ளனர் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பயிற்றுவிக்கும் பாடங்களும், மாணவர்களும் :

இக்கல்லூரியில் பி.ஏ., பட்ட வகுப்பில் வரலாறு முதன்மைப் பாடமாகவும், பி.எஸ்ஸி., பட்ட வகுப்பில் கணிதவியல், இயற்பியல், வேதியியல் ஆகிய மூன்று முதன்மைப் பாடங்களும், பி.காம்., பட்ட வகுப்பும், எம்.ஏ., வரலாறும், எம்.காம்., முதுகலைப்பட்ட வகுப்பும், எம். பில்., வரலாறும் பயிற்றுவிக்கப்படுகின்றன. மேலும், சான்றிதழ் பாடமாக இதழியல், காந்தியச்சிந்தனை, விற்பனை இயல் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்தக்கல்வியாண்டு முதல் பி எஸ்ஸி , கணிப்பொறியியல் (Computer Science) சுய நிதிப் பிரிவாகத் தொடங்கப்பட்டு சிறந்த முறையில் நடைபெறுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பி. காம்., வகுப்பில் சேர்வதற்கு அதிக மாணவர்கள் விரும்புவதால் அடுத்த ஆண்டு முதல் மாலை நேர பி. காம்., வகுப்பினையும், இதழியல் பிரிவாக பி. ஜி. டி. சி. ஏ, ஆகிய வகுப்பினையும் தொடங்க நம் நிர்வாகத்தினர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளனர். அடுத்த ஆண்டு முதல் மாலைநேர வகுப்பாக இவ்விரு வகுப்புகளும் உறுதியாக நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறிவிக்கின்றேன்.

Scanned with CamScanner

1992-93ல் பல்கலைக் கழக இறுதித் தேர்வுகளில் மாணவர்கள் வெற்றி பெற்ற விபரங்கள்

| வகுப்பு | தேர்வு எழுதியவர் | தேர்வு பெற்றவர் | விழுக்காடு |
|---|---|---|---|
| I B.A., | 52 | 17 | 33 |
| II B.A., | 47 | 17 | 36 |
| III B.A., | 45 | 44 | 98 |
| Class: | I Class - 23 | II Class - 18 | III Class - 2 |
| I B.Com., | 80 | 49 | 61 |
| II B.Com., | 67 | 46 | 69 |
| III B.Com., | 61 | 44 | 72 |
| Class: | I Class - 10 | II Class - 12 | III Class - 11 |
| I B.Sc., (M) | 26 | 15 | 58 |
| II B.Sc., (M) | 25 | 16 | 64 |
| III B.Sc., (M) | 23 | 15 | 65 |
| Class: | I Class - 13 | II Clas - 2 | |
| I B.Sc., (P) | 26 | 21 | 81 |
| II B.Sc., (P) | 23 | 10 | 43 |
| III B.Sc., (P) | 27 | 20 | 74 |
| Class: | I Class - 20 | | |
| I B.Sc., (C) | 29 | 19 | 66 |
| II B.Sc., (C) | 19 | 12 | 63 |
| III B.Sc., (C) | 18 | 11 | 65 |
| Class: | I Class - 11 | | |
| I M.A., | 21 | 21 | 100 |
| II M.A., | 23 | 23 | 100 |
| Class: | I Class - 23 | | |
| I M.Com., | 24 | 18 | 75 |
| II M.Com., | 22 | 16 | 73 |
| Class: | I Class - 16 | | |

கடந்த ஆண்டு 6 மாணவர்கள் ரேங்க் பெற்றுள்ளார்கள் என்பதைத் தெரிவிக்கின்றேன்.

**கல்லூரி மாணவர் பேரவை:**

இவ்வாண்டு மாணவர்களின் உணர்வுகளை மதித்து கல்லூரி மாணவர் பேரவை அமைக்கப்பட்டது. சிறப்புடன் செயல்பட்டது, ஆனால் கல்லூரி நடப்பதற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் பேரவை உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டதால் அதனைக் கலைப்பது என நிர்வாகம் முடிவு செய்து கலைக்கப்பட்டுவிட்டது என்பதனைத் தெரிவிக்கின்றேன்.

Scanned with CamScanner

நடைபெற்ற விழாக்கள்:

நமது கல்லூரி பேரவையின் சார்பில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன அவற்றில் இரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன். இந்த ஆண்டு புதிதாகத் தொடங்கப்பெற்ற கணிப்பொறியியல் பிரிவினை முறைப்படி மைய அமைச்சர் திரு ரெங்கராஜன் குமாரமங்களம் 17-7-93 அன்று தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து யு. ஜி. சி. நிதி உதவியுடன் கட்டப்போகும் அறிவியற் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அடுத்து 28-1-94 அன்று மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் துணை வேந்தர் நம் கல்லூரிக்கு வந்து மாணவர்கள் ஓய்வு அறைக்கு அடிக்கல் நாட்டினார்கள். நாட்டுத்தொண்டுத் திட்ட வெள்ளி விழா ஆண்டு நிகழ்ச்சியில் பங்கு கொண்டார்கள்.

முதுகலைப் பட்டவகுப்பு மன்றம்.
(வணிகவியல், வரலாறு).

சிறந்த பேராசிரியர்களைத் தேர்வு செய்து, அழைத்து வந்து முதுகலைப்பட்ட மாணவர்கட்குப் பயன்படும் சொற்பொழிவுகளை ஆற்றச் செய்கின்றனர். அங்ஙனமே நம் கல்லூரிப் பேராசிரியர்களும் பிற கல்லூரிகட்குச் சென்று சிறப்புச் சொற்பொழிவு செய்கின்றனர் என்பதனை இங்கு குறிப்பிடுகின்றேன்.

நூலகம் :

16,500 நூல்களையும், 25 மாத வார இதழ்களையும் கொண்ட நமது நூலகம் ஆசிரியர் மாணவர் அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நிற்கின்றது.

நாட்டு நலத்திட்டம் :

நம் கல்லூரியில் இரண்டு நாட்டு நலத்திட்ட அணிகள் உள்ளன. ஒரு அணிக்கு திரு. எஸ். முத்துகிருஷ்ணன அவர்களும், மற்றொன்றுக்கு திரு. வெங்கடேஸ்வரன் அவர்களும் திட்டப்பொறுப்பாளர்களாக உள்ளனர். இவர்கள் மாணவர்களின் உறுதுணையுடன் திட்டப்பணிகள் பலவற்றினைச் செய்து வருகின்றனர். இந்த ஆண்டு 18-2-94 முதல் 27-2-94 வரை கொடிக்குளம் என்ற கிராமத்தில் சிறப்பு முகாம் அமைத்து பொதுமக்கள் பாராட்டும் வகையில் திட்டப்பணிகளைச் செய்துள்ளனர்

தேசிய மாணவர்படை, சமூகப்பணி,
இளைஞர் அணி, ரோட்ராக்ட்:

மாணவர் தேசியப்படை திரு ஜி சந்திரசேகரன் அவர்களின் பொறுப்பில் நடைபெறுகின்றது. மேலும் சமூகப்பணி, இளைஞர் அணி, ரோட்ராக்ட் போன்ற இயக்கங்கள் முறையே திரு. வெங்கட்டராமன், திரு. ஜி. இராதாகிருஷ்ணன் அவர்கள் பொறுப்பில் நடைபெறுகின்றது.

விளையாட்டுத்துறை :

இவ்வாண்டு நம் கல்லூரி முதல் முறையாக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் 'பி' மண்டலப்பிரிவில் 'Tennis' விளையாட்டுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று உள்ளது. மேலும் நம் கல்லூரி மாணவர் ஜி. நவநீதகிருஷ்ணன் 'Volley Ball' விளையாட்டில் பல்கலைக்கழகத்திற்கு தேர்வுசெய்யப்பட்டு விளையாடி வந்தார். நம் கல்லூரி விளையாட்டுத்துறை இயக்குனர் திரு. சதாசிவன் முதல் முறையாக Ball Badminton விளையாட்டிற்கு பல்கலைக்கழக குழுவிற்கு மேலாளராகப் பணிபுரிந்தார் என்ற இனிய செய்தியை இங்கு தெரிவிக்கிறேன்.

அறக்கட்டளை :

திரு. எம். எஸ். டி. சந்திரசேகர ராஜா, டாக்டர் டி. ரெகுபதி ராஜா, திரு. பி. ஏ. பி. அழகராஜா, திரு. டி. சி. இராமசாமி ராஜா, திரு. என். ஆர். கிருஷ்ணம ராஜா, திரு. எம்.பி.வி. அய்யனார் ராஜா, திருமதி கே.பி.பி. தமயந்தி அம்மாள், திரு. கே.பி. பட்டாபிராம ராஜா, ஆகியோர் அறக்கட்டளை அமைத்து முறையே பி.காம்., பி.ஏ., எம்.காம்., எம்.ஏ., பி.எஸ்.சி., கணிதம், பி.எஸ்.சி., வேதியியல், பி.எஸ்.சி., இயற்பியல் ஆகிய வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவருக்கும்;

Scanned with CamScanner

கல்லூரியில் சிறந்த மாணவருக்குப், தமிழ்த் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவருக்கும், ஆங்கிலத்தில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவருக்கும், பி.காம்., பிரிவில் ஆங்கிலத்தில் முதன்மையாக மதிப்பெண் பெற்ற மாணவருக்கும் ரொக்கப்பரிசுகளை ஆண்டு தோறும் கல்லூரி ஆண்டு விழாவின் போது மாணவர்க்கு வழங்குகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு நன்றி கூறுகின்றேன். திரு. எம். ஏ. சுப்பிரமணிய ராஜா அவர்கள் தனது தாயாரின் பெயரில் ரூ. 2000த்திற்கு ஒரு அறக்கட்டளை நிறுவி பல்கலைக்கழகத் தேர்வில் ரேங்க் பெறும் நமது கல்லூரி மாணவருக்குப் பரிசு வழங்குகிறார்கள் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவர் விடுதி :

இவ்வாண்டு 40 மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். பேராசிரியர் எ. ஜெனார்த்தனன் துணைக் காப்பாளராகவும், திரு. ஏ்நய்வாசகம் கண்காணிப்பாளராகவும் இருந்து விடுதியைக்காக்கின்றனர்.

நிர்வாகத்திற்கு நன்றி :

நீண்ட காலமாக மாணவர்களின் வேண்டுகோளை நிறைவு செய்யும் வகையில் மாணவர் ஓய்வறையைக் கட்டியதற்கு நிர்வாகக்குழுத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கட்கு என் நன்றியைத் தெரிவிக்கின்றேன். மேலும், பல்கலைக்கழக நிதி உதவியுடன் 6 லட்சம் மதிப்புள்ள கட்டிடத்தினை கணிப் பொறியியல்துறைக்குக் கட்டத் தொடங்கியமைக்கு நிர்வாகக் குழுவினர்க்கு என் இனிய நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அனைத்து வழிகளிலும் அயராது உழைத்து, வழி காட்டியாக இருந்து வரும் கல்லூரி ஆட்சிக் குழுத் தலைவர், செயலர், உறுப்பினர் கட்கும், அனைத்து வழிகளிலும் முழு ஒத்துழைப்பினைத் தரும் ஆசிரியர், அலுவலர், மாணவர்கட்கும் என் இனிய நன்றியினைத் தெரிவிக்கின்றேன். மேலும், விருதுநகர் செந்தில் குமார நாடார் கல்லூரியில் பணி புரிந்த என்னை இக் கல்லூரி தொடங்கிய காலத்தில் தமிழ் விரிவுரையாளனாக நியமனம் செய்து, பின்னர் தமிழ்ப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் உயர்வு செய்த அமரர் என். ஏ. இராமச்சந்திர ராஜா அவர்கட்கும், கல்லூரிச் செயலர் திரு. எம். எஸ். டி. சந்திரசேகர ராஜா அவர்கட்கும் என் இதய பூர்வமாக நன்றியினைத் தெரிவிக்கின்றேன். இதனைத் தொடர்ந்து என் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த அமரர் முன்னாள் நீதிபதி கோதண்டராம ராஜா அவர்கட்கும், என். ஆர். கே. சுப்புராம ராஜா அவர்கட்கும் என் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். இறுதியாக என் மீது பற்றும் பாசமும் நம்பிக்கையும் வைத்து முதல்வர் பொறுப்பினைக் கொடுத்து சிறப்பு செய்தமைக்கு கல்லூரி ஆட்சிக் குழுவினருக்கு என் இதய பூர்வமாக நன்றியினைத் தெரிவிக்கின்றேன். நான் ஓய்வுபெறும் வேளையில் இக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் அனைத்து நலமும் பெற்று வாழ வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

Scanned with CamScanner

# மதிப்போம் பெண்ணினத்தை!

இர. பெரியாண்டவர்
இளநிலை மூன்றாம் ஆண்டு கணிதவியல்

ஆயிரமாயிரம் ஆசைகளை அடுக்கடுக்காய் மனதில் சுமந்து இவ்வுலகைக் காணப்போகிறோம். மாற்றப் போகிறோம் வாழப்போகிறோம், மகிழ்ச்சியோடு இருக்கப்போகிறோம் என்று மகிழ்ந்து துள்ளிய அந்த பாரிசாத மலர் பிறந்த இரு தினங்களுக்குள்ளேயே பாலைப் பருகியவுடன் பரலோகத்திற்கு அனுப்பப் பட்டது. பருகியது பால்தான் என்றாலும் அது கள்ளிப் பால் இல்லையா? காரணம் புரியவில்லையா? பெண்ணாகப் பிறந்தது ஒன்று தான் காரணம். கருவறையைக் கல்லறையாக்க மறந்ததால் இன்று சமாதி கட்டிய சமுதாயம் இந்த உலகில் பெண்ணாகப் பிறந்து துன்பப் படுவதை விட சாவதே மேல் எனச் சாக்குச் சொல்லி சமாதானம் அடைகிறது. கல்லில் இடறுவதற்காக காலையே தறிப்பதா?

இந்த கொடுமைகளில் தப்பித்த நெஞ்சங்களுக்கு சிறு வயதில் சத்தமாகப் பேசாதே! சிரிக்காதே சன்னல் பக்கம் போகாதே! வீட்டை விட்டு வெளியே போகாதே! அடக்கமாயிரு! அமைதியாக இரு பொறுத்து போ என்றெல்லாம் ஒடுக்கு முறைகளையும் அமைத்து ஒழுக்க முறைகளையும் அமைத்துள்ளது சமுதாயம். இந்த சமுதாயச் சாக்கடையில் அன்றாடம் கேட்டு கேட்டு அனலில் புழுவாக துடிக்கும் தோழியர் எத்தனை பேர்.

மகளே நீ வெளியே சென்றால் உன் பின்னால் வந்து தொல்லை கொடுப்பர் ரோட்டோர ரோமியோக்கள் எனக் கூறி பெண்ணை வீட்டினுள் அடைக்கும் பெற்றோரே! வெளியே செல்லும் மகனிடம் மகனே நீ பெண்களைக் கேலி செய்யாதே காதல் எனக் கூறி கதை வசனம் பேசாதே என்று சொன்னதுண்டா? பெண்ணைப் படிக்க வைத்தால் அவள் கரம் பிடிக்க மணாளனின் விலையும் அதிகமாகுமே என ஏங்குகின்ற பெண்ணைப் பெற்றவர்கள் பிறப்பு முதல் பெற்றோர் சொற்கேளா மைந்தன் கூட திருமணத்தின் போது மட்டும் எனக்கு வேண்டும் வரதட்சணை, ஆனால் என் தாயின் விருப்பத்திற்காக வரதட்சணை கொடுங்கள் என வாய் கூசாமல் கையேந்தி நிற்பது இன்று சமுதாய சம்பிரதாயமாகி விட்டது.

திருமணத்திற்குப் பின்னும் கொடுமைகள் எரிமலைகளாக அவ்வப்போது அவள் வாழ்வைச்சீண்டுகின்றன. குடிகாரக்கணவன் என்றால் அன்றாடம் அவருக்கு அக்கினிப் பிரவேசம் இதனை அவன் தினந்தோறும் குடித்தான் அவளும் ஒரு நாள் குடித்தாள் விஷம். அவன் வாழ்வை முடித்துக் கொண்டாலும் இவளுக்கு காத்திருப்பது வெள்ளைப் புடவை தானே, பூவும் பொட்டும் இழந்து நாலு பேருக்கு நடுவே நடக்கவும் அருகதையற்று நடைப் பிணமாகத்தானே இவள் வாழ வேண்டும். கணவனை இழந்தவள், என்ன காணத் தகாதவளா? ஆனால், மனைவியின் கல்லறை காயுமுன்னே ஆண்களுக்கு மறுமண ஏற்பாடு. பெண்ணினமும் இதற்கு உடன்பாடு. இதனால் ஒன்று மட்டும் புரிகிறது! ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்ணுரிமை என்பது சமுதாய நோயின் ஒரு குஷ்டரோகப் புண்! இதை மாற்றா விட்டால் மாண்டு போகும் மானிடம். பிறந்திட்டோம்

Scanned with CamScanner

'அல்லவை தேய அறம் பெருகும்.' ஊதாரித் தனம் மறைந்தால் சேமிப்பு பெருகும். சேமிப்பு வளவாழ்விற்கு இட்டுச் செல்லும். வளவாழ்வு பிறருக்கு உதவும் வாய்ப்பினை நல்கும். சேமிப்பைப் பற்றி புலவர் கா. அப்பாத்துரை கூறுகிறார், "சேமிப்பின் மெய்ப்பலன் தன் மறுப்பு மூலம் வரும் தற்பற்றும், திட்ட பழக்கமே ஆகும். சேமிப்பின் மற்றொரு படிப்பினை, செலவு வாழ்க்கைக்காக, வாழ்க்கை செலவுக்காக அல்ல என்பதே. சேமித்து செல்வந்தராவதில் மகிழ்ச்சியடைவது போல பிறருக்கு உதவுவதிலும் ஒரு மகிழ்ச்சியுள்ளது. அமெரிக்க நாட்டின் செல்வந்தர் ஆண்ட்ரு கார்னிஜியை உலகம் முழுவதும் இன்று அறிந்திருக்கிறதென்றால் அது அவரது அறக்கொடையால் தான். சிக்கனம், சேமிப்பு, ஈத்துவக்கும் இன்பம் ஆகியவையே வளவாழ்வின் நோக்கமாகும்.

★★★
★

## புதுக் கவிதை

'பூமகள்'

எடெடுத்தேன் கவி புனைய
ஏந்திழையாள் எனைத் தடுத்தாள்
கவி மழையாய் நானிருக்க
கவிதை மலர் ஏதுக்கென்றாள்
குழலெடுத்தேன் பாட்டிசைக்க
குழைந்து அவள் எனைத் தடுத்தாள்
பூங்குழலாய் நானிருக்க
ஊது குழல் ஏதுக்கென்றாள்
பூவெடுத் தேன் சரம் தொடுக்க
பூ மகளும் எனைத் தடுத்தாள்
புது மலராய் நானிருக்கப்
பூமாலை ஏதுக்கென்றாள்
யாழ் எடுத்தேன் பண்ணிசைக்க
யாசித்து எனைத் தடுத்தாள்
ஏழிசையும் சேர்ந்து யானிருக்க
யாழிசை ஏதுக் கென்றாள்.

நீ மீனாட்சிசுந்தரம்
இரண்டாமாண்டு இயற்பியல் துறை

## விண் வெளி அறிவியல்

விண்வெளிக்குச் சென்ற முதல் இந்திய விண்வெளி வீரர்?
— ராகேஷ் சர்மா

சந்திரனின் மேற்பரப்பில் நடந்த முதல் விண்வெளி வீரர்?
— நீல் ஆர்ம்ஸ்டிராங்

மனிதனின் முதல் விண்வெளி பயணம்
— 1961

மனிதனின் முதல் விண் வெளிபயணத்தை துவக்கியது எந்த நாடு? யார்
— ரஷியா, யூரிககாரின்
வாலெண்டினா டெரங்கோவா (பெண்)

இந்தியாவில் விண்வெளி ஏவுகணை நிலையம் உள்ள இடம் எது?
தும்பா, - திருவனந்தபுரம்

விண்வெளியில் பயணம் செய்த முதல் பிராணி?
— நாய்

S. சங்கிலிராஜ்
II M.A.,

S. Rajeswaran, M. A.,
Captain & Founder
Maveran Cricket Club
SRIVILLIPUTTUR.

# Priya Musicals

76-D, Chinna Kadai Bazar,
SRIVILLIPUTTUR-626 125.
Kamarajar District.

Scanned with CamScanner

WITH BEST COMPLIMENTS FROM:

# THANGALAKSHMI TRADERS

OLD IRON & SCRAP MERCHANTS

663, SIVAKAMIPURAM STREET,

RAJAPALAYAM.

****

*PROP:- K. GANESAN,*

THANKING YOU,

Scanned with CamScanner

WITH BEST COMPLIMENTS FROM :

# UTHAYAM READY MADE STORES

285/C, TENKASI ROAD,

RAJAPALAYAM.

**Exclusive Ready Made Shirts**

**T. Shirts are Available**

**Specialist In Baby Frocks.**

Scanned with CamScanner

With Best Compliments from :

# CAMBRIDGE TAILORS

**84, West Car Street,**

**SRIVILLIPUTTUR.**

Gents Specialist.

The Best Tailors in the City

Scanned with CamScanner

# SOME CURRENT BURNING PROBLEMS TO INDIA

**T. Marimuthu**
Head, Dept. of Physics

The aim of Higher Education, other than the class room works is to inform the public and inculcate the students the significance and implications of the problems the country faces in the international level by way of seminar and symposium. This is to enrich the knowledge of the problem, and enhance the potential of awareness in the society. So the ardent citizens quickly identify the well-wishers and ill-wishers of India in the international politics.

1. Cryogenics and ISRO
2. NPT and NPC of India

and 3. Dunkel Draft and GATT

are some important problems and the gist of each is presented here. A correct and decisive policy of Indian Government upon these problems helps to stabilize the trembling economy of India and thereby raise the status of India in world arena

## 1. CRYOGENICS AND ISRO :

Academically, Cryogenics means low temperature Physics. Technically, it refers to liquid propellent rocket engine which is more powerful and less self-load in comparison with solid propellent rocket engine. Satellite launching with Cryogenic engine therefore enables to increase the pay load and reach the higher orbit like geostationary (36,900 KM.)

The net weight of engine PSLV to launch the satellite into the orbit of 820 KM is 275 tonnes but the weight of satellite or payload is only 850 Kgm. If the cryogenic engines are employed the net weight decreases and the weight of the satellite will be increased to several tonnes and it can easily be put into geostationary orbit of 36,900 KM. The cost of INSAT - 2B is 78 Crores but the cost of its launching by Ariane is 99 Crores. So Cryogenics is indispensable for ISRO.

Indian Space Research Organisation (ISRO) sets back due to want of Cryogenic technology. U. S, Russia, U.K France Ariane (European Countries), China and Japan have acquired cryogenic capabilities. None of the countries except Russia is ready to sell this technology to India. Inspite of the declaration by India that the Cryogenics would be exclusively for space research and not at all for offence purposes, US is constantly charging that India would acquire the capability of Inter-Continental Ballistic Missile (ICBM) and prevents Russia to transfer the Cryogenic technology to India.

In future every country must have satellites for its domestic and defence purposes. If ISRO is successful in cryogenic technology by any means or ways, the cost of launching will be dead cheap. India will gain rich potential and get orders from different countries, particularly Arabians.

Scanned with CamScanner

Above all, the full-fledged role of ISRO in Agriculture is inevitable since food production must be doubled within 10 years.

## 2. NPT AND NPC OF INDIA :

Nuclear Non - Proliferation Treaty (NPT) was made in 1970 among 43 countries. Its aim is to stop the Nuclear Arms Race by way of stopping the production of the fissile materials (like Plutonium (U 239) by fast breeder nuclear reactors and hence the nuclear waepons.

International Atomic Energy Agency (IAEA) is the verification officer and US is the police officer for the control over the nuclear affairs in the globe. This authority warns those countries like India and North Korea for not coming under NPT but shuts the eyes towards the production of PU 239 by Japan, the member of the NPT.

The current situation for international co-operation for peaceful uses of nuclear energy is far less than satisfactory. Some developed countries openly restrain the developing countries in peaceful uses of nuclear energy in the name of NPT. Dr. R. Chidambaram, chairman of the Atomic Energy Agency is of opinion that NPT is used as a tool for technological denial for developing countries like India.

Nuclear Power Corporation (NPC) of India plans to generate 10,000 MW by 2000 A D, but under prevailing conditions it can reach not even 3000 M.W. We prepare PU-239 by fast breeder nuclear reactors (CANDU) in the atomic power stations The mixed fuel of PU239 and thorium U 233 is to supply energy for India of Tomorrow and not at all for making nuclear weapons.

## 3. DUNKEL DRAFT and GATT :

Nearly 108 countries including G-7 (Club of the rich - UK, Uk. France, Germany, Japan, Italy and Canada) met in Geneva in 1990 and discussed on General Agreement on Tariff and Trade (GATT) This meet has authorised General Director of GATT Dr. Arthur Dunkel, to make a draft on GATT. This is called Dunkel Draft or Proposal. The present director of GATT is Mr. Peter Sutherland.

The principal area of GATT covers Textiles, Agriculture, Tariffs and Trades in different concerns. The farm deal pertaning to patent of seeds and subsidies seems to affect the interests of the farmers in India.

Government of India has accepted this package but not compromised the public. Inspite of the opposition in the country the government believes that there is a lot of benefits to farmers and traders, but hesitates for open debates on Dunkel Draft. The public opinion is that India may have such agreements with individual country on the basis of bilateral agreement instead of GATT so that India could escape from exploitation.

★★★
★

Scanned with CamScanner

With best Compliments from :

# P. V. S. JEWELLERS

521, Boopalrajapatti Street

RAJAPALAYAM - 626117.

Phone : 20781.

****

With Best Compliments from :

☎ 22906

# ⋆ SREE ARUN JEWELLERS, ⋆

3, Boopalraja Patti Street,

RAJAPALAYAM - 626 117.

Scanned with CamScanner

With Best Compliments From :

# SEEMATTI

## RAJAPALAYAM

20 ஆண்டுகள் கல்விப் பணி புரிந்து சிறப்புப் பெற்ற இராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி மேலும், பல்லாயிரம் ஆண்டுகள் கல்வியில் சிறப்புப் பணியாற்ற வாழ்த்துகிறோம்.

# சீமாட்டி

★★★:★★★:★★★★★

## இராஜபாளையம்

போன் : 22608

**புதுமை ஜவுளி மாளிகை**

திருமண பட்டுப் புடவைகள், நாகரீக சேலைகள் ஆடவர்களுக்கு புகழ்மிக்க நிறுவன ரெடிமேட் சர்ட், & ட்ரவ்சர்கள், ஜீன்ஸ்கள், மழலைச் செல்வங்களுக்குச் எண்ணிலடங்கா ரெடிமேட் ஆடைகள் அனைத்தும் ஒரே இடத்தில்; வருக! வருக!! என அன்புடன் அழைக்கிறோம்.

Scanned with CamScanner

# ECONOMICS IN EVERY DAY LIFE

**S. R. Rajkumar**
II B Sc., (P)

Raj and Priya are very thick friends. Raj is an Economics student and Priya, a Science student. They are waiting for the B.A., B.Sc., Results to be out. Raj wants to join the post-graduate course in Economics, so that he would be benefited in future. But Priya has no high opinion about Economics. The conversation, if not the argument, which takes place between them is as follows.

Raj : So you are of the opinion that Economics has got nothing to do with actual life.

Priya : Of Course. Laws of Economics are statements of tendencies and they are conditional.

Raj : Are not the laws of Science also conditional? Take your law of gravitation, Sir Isaac Newton states that if I throw something up, it will surely come down. But if there is a gale, I will see it floating in the air. What do you say about it, Miss Priya? Again only when two parts of Hydrogen and one part of Oxygen are mixed, you get $H_2O$. Otherwise no water will be formed. So are you not thinking that your laws, too, work under certain conditions. I will convince you Priya, that Economics occupies a very important place in every walk of life.

Both enter a Cafe. As Priya says that her favourite sweet is halwa, the server supplies it. When priya finishes, a second plate is ordered. Then priya says, "Is it to catch me in your net?". Raj just laughs and orders another plate of halwa. Somehow with great difficulty Raj swallows the halwa supplied in the second serving and he rejects any more. Then she asks, "What are you thinking about Raju"?.

Raj : (With a broad smile): Only this. That "the additional benefit which a person derives from a given increase of his stock of thing diminishes with every increase in the stock that he already has"-which is our famous Law of Diminishing Marginal Utility.

Priya : Very good. But leave me alone please!

When Raj pays the bill Priya begins to read the Paper. Her face reddens. As RAJ sees it and approaches her, PRIYA says "Flood Disaster", "Train accident"...... see, my dear Raj nature is cruel to our people in this modern age of Science".

Raj : Laws of Science are at a loss here. So, are the train accident, car accident.........

Priya : What a Pity?

Raj : It ought to be so.

Priya : (With anger) Do you say that you have not an atom of pity for these people?

Raj : Of Course, I have but I meant there is reason for it!

Priya : Was Nature so kind as to promote such a feeling in you!

Raj : No my dear, not nature. But Mathus.

Priya: What is that?

Raj : Not what, But who!

Priya : (Eagerly) Well, tell me who he is

Raj : He is the clergyman economist who gave the first theory of population. He said, that when there is over-population, if preventive checks are not exercised then positive checks like famine floods and pestilence will operate!

Priya : __________ !!! while walking along the they come near the Canara bank road, Priya remembers that she has to cash a cheque and steps into the Bank. She meets a friend, who is a well-known figure in the business circle. As he is not very cheerful, priya asks for the reason. He says that he could not make those people lend him money. Priya wonders how the bank could have acted, like that knowing him well.

Raj : Their cash balances might have fallen below their legal cash ratio.

Priya : What on earth do you mean by that?

Raj : Banks keep a required percentage of cash in hand as reserve ratio to meet the emergency and lend the remaining to the needy borrowers by charging a rate of interest.

Priya : Is it your Economics?

Raj : (Proudly) Yes!

Then Priya wants to buy a pen for her sister and asks her friend to accompany her. As they proceed, they find a long queue in front of the shop.

Priya : What is that for?

Raj : See the board; the price of sugar has been cut down So the demand for sugar is elastic That is, People want to buy more at low Prices?

Priya : Will the shop-keeper not incur heavy loss if they sell goods at reduced prices?

Raj : No. Because profits will be high if only they sell more goods at low prices rather than selling less at higher prices.

Priya : Is this also one of the intricacies of Economics?

Raj : Yes, that is the law of Demand which states, "a fall in prices is followed by an expansion of Demand".

Both enter the shop. Raju selects a "HERO" Pen for Priya.

Priya : I have got only Rs. 35/- It must be Rs. 45/- let us know the actual price of the pen.

Scanned with CamScanner

Raj : The price tag shows Rs. 35/- only.

Priya : It is nice, let us buy it.

Raj : Here comes our Marshall with his concept of Consumer's surplus "The excess of the Price which the Consumer would be willing to pay rather than go without the thing over that which does he actually pay is the Economic Measure of surplus satisfaction" That is what Marshall says.

Priya : My mother says that she bought the same pen for Rs. 5/- only, when I was a child.

Raj : Of Course. But Prices are rising by leaps and bounds The simple reason for this is that there is inflation or expansion of currency.

Priya : How do you call it?

Raj : Currency Inflation.

Priya : Oh Dear I wish to give serious thought to these aspects of Economics; to be modern is to under stand these intricacies.

Raj : I hope that I have convinced you to some extent that Economics has the utility value to guide our day-to-day economic activities.

★★★
★

## Life is ... What

Life is Adventure ... Dare it
Life is Beauty ...... Praise it
Life is Bliss ...... Take it
Life is Dream ...... Realize it
Life is Duty ...... Perform it
Life is Journey ...... Complete it
Life is Love ...... Enjoy it
Life is Mystery ...... Unfold it
Life is Opportunity ...... Utilize it
Life is Problem ...... Solve it
Life is Promise ...... Fulfil it
Life is Song ...... Sing it
Life is Sorrow ...... Overcome it
Life is Struggle ...... Accept it

**H. J. Gunasingh**
B.A., II year

Scanned with CamScanner

With the best compliments from:

# Winson Knitting Company

Mfrs: WORLD CLASS SPORTS WEAR FOR ALL

27-A, LINK ROAD.
VIRUDHUNAGAR - 626 001

Scanned with CamScanner

With Best Compliments From:

# Asoka Saw Mills

and

# Deepa Timber Industries

26, PANNAYAR ROAD, RAJAPALAYAM - 626 117.

Phone : 22745
Resi : 20184
22001

Scanned with CamScanner

# The United Scientific Co., (Madurai)

Manufacturers and Suppliers of Laboratory Appliances and Chemicals

5, GOODS SHED STREET ( IST FLOOR )

**MADURAI - *625 001.***

—:✱✱:—

☎ 27387

TLX : 0445-406 KCDC IN Fax : 0452-39156 Attn United Scientific

- 1 Instruments & Equipments for Engineering Colleges Polytechnics, Public Health Highways and Industries
- 2 Instruments For Chemicals, Biochemical, Medical and Agricultural Laboratories
- 3 Equipments for Arts & Science Colleges (Physics, Chemistry, Botany and Zoology Departments)


Scanned with CamScanner

# நுகர்வோர் நலன்

N. சத்தியகீர்த்தி. B.A.,B.L,D.L.,A.L.,
வழக்கறிஞர்/பகுதி நேர பேராசிரியர்

முன்னுரை :- நீதி மன்ற வரலாற்றிலே, திருப்பு முனையாக அமைந்த நுகர்வோர் குறை தீர்க்கும் மாமன்றத்தின் அமைப்பினையும் அதன் வழி நுகர்வோர் நலன் காத்தலையும் நுகர்வோர் குறைகள் தீர்க்கும் வழி முறைகளையும் விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்

The Principle on "CAVEAT EMPTOR" (வாங்குபவனே விழித்திரு) என்னும் கொள்கையின் அடிப்படையில் வாங்குவோர் விழிப்படைய பரிந்துரைப்பதோடு, நுகர்வோரின் அடிப்படை உரிமையைக் காத்துக் கொள்ள முனைவதே இக் கட்டுரையின் வழி ஆலோசனையாகும்.

தோற்றமும் செயல் எல்லையும்:- நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் (The Consumer-Protection Act) என்ற பெயரில், வெளி வந்த இச் சட்டம் 1986-ல் இயற்றப்பட்டது இச் சட்டமானது ஜம்மு-காஷ்மீர் தவிர இந்திய நிலப்பரப்பு முழுவதும் செயல் திறன் கொண்டது.

நுகர்வோர் என்பவர் யார்? ஒரு வர்த்தக நடவடிக்கையில் பணம் செலுத்தப் பட்டு அதற்குப் பிரதி உபகாரமாக பொருளையோ அல்லது சேவையையோ நுகர்ச்சி பெற்றனர் அல்லது உடன் பட்டவர்.
"SOLUS POPULI EST SUPREMA LEX" என்ற லத்தீன் சொற்றொடரானது அரசும் சட்டமும் மக்கள் நலனுக்காக மட்டுமே அமைய வேண்டுமேயன்றி அரசுக்காகவும் சட்டத்திற்காகவும் மக்கள் என்ற கொள்கை மக்களாட்சி தத்துவத்திற்கு ஏற்றது அல்ல என்ற பொருளைத் தருகிறது. அதுபோலவே மக்களின் நலன் நுகர்வோர் என்ற ரீதியில் காக்கப்பட வேண்டும் என்பது தலையாயது.

யார் வழக்கு தொடரலாம்:- கீழ்க்கண்ட நபர்கள் நுகர்வோர் வழக்குத் தொடர உரிமை உடையவர்கள்.

1. நுகர்வோர் (புகார் செய்பவர்)
2. இந்திய கம்பெனிச் சட்டம் 1956, அல்லது நடைமுறையில் உள்ள வேறு எந்த ஒரு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நுகர் வோர் பாதுகாப்பு குழு.
3. மத்திய அரசு அல்லது மாநில அரசு (புகார்செய்பவர் என்ற நிலையில்) அல்லது
4. ஒன்றுக்கு மேற்பட்ட நுகர்வோர்கள் (ஒரே பரிகாரத்தை விரும்பி, அல்லது ஒரே மாதிரியான புகாரைக் கொடுக்கும் பொழுது).

எந்த மாதிரியான குறைகள் நிவர்த்தி செய்ய நுகர்வோர் வழக்கு தொடரலாம்:-

1. முறையற்ற வர்த்தக நடவடிக்கை (Unfair Labour Practise)
2. குறையுள்ள விற்பனைப் பொருள்கள் (Defective goods)
3. பெறப்பட்ட சேவையில் ஏற்படும் குறைகள். (Deficiency in Service)
4. அபரிமிதமான (விலைப்பட்டியலில் காணப் படும் தொகையைக் காட்டிலும், அல்லது விற்கப்படும் பொருளின் பொட்டலத்தில் ஒட்டப்பட்ட விலையைக் காட்டிலும் அதிகமாக) வசூலிக்கப்பட்டால்

Scanned with CamScanner

5. நுகர்வோருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய பொருளை விற்பனை செய்து இருந்தால், விற்பனை செய்ய முற்பட்டால், அல்லது மேற்படி பொருள்கள் நடைமுறையில் உள்ள சட்டப்படி அபாயகரமானது என்ற எச்சரிக்கை செய்யப்பட வேண்டும் என்ற விதி இருந்தும், மீறி விற்பனை செய்தால், அல்லது மேற்படி விதிகள் மீறப்பட்டால்

மேற்கூறப்பட்ட செயல்களில், ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களோ ஒருவர் செய்து இருந்தால் அவர் மீது இவ்வாறு வழக்கு தொடரலாம்.

மேற் கூறப்பட்ட குறைபாடுகளில், "தரம்" "தன்மை" "எண்ணிக்கை" ஒப்புக் கொண்ட எண்ணிக்கையை விட குறைவாக விநியோகம் செய்தல் அல்லது "விதி முறைகளின்படி செயல் படாமல் இருந்தால், ஆகியவை அடங்கும்.

புகாரை யாருக்கு அனுப்ப வேண்டும்:-

நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தின் தலைவரான, மாவட்ட நீதிபதி அவர்களுக்கு புகாரை அனுப்ப வேண்டும்.

யாருக்கு எதிராக புகார் செய்யப்படுகிறதோ, அல்லது எந்த இடத்தில் வழக்கு தொடர்வதற்கு உண்டான செயல் (Cause of action) அல்லது குறைபாடு நடைபெற்றதோ, அவர் வசிக்கும் இடம், எதிர் மனுதார் அலுவலகம் அல்லது கிளை அமைந்துள்ள இடம் அல்லது ஷெ செயல் நடைபெற்ற இடம், எந்த மாவட்ட நீதிபதியின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதோ அந்த நீதிபதிக்கு மட்டுமே புகார் அனுப்ப வேண்டும்.

புதிய சட்டப்படி ஷெ புகாருக்கு உட்பட்ட செயல் நடந்த நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள், புகார் செய்யப்பட வேண்டும். மாவட்ட நீதிபதிக்கு, புகாருக்குட்பட்ட பொருளின் பணமதிப்பு அல்லது சேவைக்கு மறுபயன் ரூபாய் ஐந்து லட்சத்திற்கு உட்பட்டு இருக்கும் பட்சத்தில், புகாரைப் பெற்று தீர்மானிக்கும் அதிகாரம் உண்டு.

சிறப்பு அம்சங்கள்:-

1. நடைமுறையில் உள்ள மற்ற நீதிமன்றங்களைப் போன்று, நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு நீதி மன்ற கட்டணம் (Court Fees) கிடையாது.

2. அது போல் கடுமையான நடைமுறைகள் கிடையாது. இருந்த போதிலும் சிவில் வழக்குகளைப் போன்று, "தடை உத்திரவு" "செயலுறுத்துக் கட்டளை" 'ஆணையர் நியமனம்" மற்றும் இழப்பீடு (Compensation) போன்ற பரிகாரங்கள் பெற முடியும்; வழக்கமான நீதிமன்ற முடிவுகளைப் போன்றே இந்த நுகர்வோர் நீதி மன்றங்களின் தீர்ப்பும் செயல்திறனுடையவை.

3. நுண் ஆய்வுக்குட்பட்ட பொருளின் குறைபாடுகள் நீங்கப் பெறுதல். குறையுள்ள பொருள்களுக்கு ஈடாக தரமான பொருளை திரும்பப் பெறுதல், வழக்கின் செலவுத் தொகை ஆபத்து விளைவிக்கக் கூடிய பொருள்கள் விநியோகிப்பதைத் தடுத்தல், அல்லது சேவைக் குறைபாட்டினை அகற்றுதல், போன்ற தீர் வழிகளைப் பெறலாம்,

4. மேலும், நுகர்வோர் வழக்குகள், தொடரப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் தீர்க்க வேண்டும் என்ற விதி போற்றுதலுக்குரியது.

நுகர்வோர் நீதி மன்றத்தின் அமைப்பு :-

தலைவர் (மாவட்ட நீதிபதி)

| உறுப்பினர் (ஆண்) | (பதவி காலம்) 5 ஆண்டுகள் | உறுப்பினர் (பெண்) |
| --- | --- | --- |

மேற்கண்டவாறு மூன்று நபர் கொண்ட மாவட்ட நுகர்வோர் நீதி மன்றம் மாவட்ட நீதி மன்ற வளாகத்திலேயே செயல்படுகிறது.

Scanned with CamScanner

சட்டத்திருத்தங்கள்:- (Amendment)

கடந்த "18-6-93" அன்று 24-வது சட்டத்திருத்தத்தின்படி கீழ்க்கண்ட சில முக்கியமான திருத்தங்கள் கொண்டுவரப் பட்டன.

அவைகள் முறையே :-

1. காலவரையறை:- ஒரு வருடமாக ஆக்கப்பட்டது

2. பணவரவெல்லை :- வழக்கின் பண மதிப்பு ஒரு லட்சத்திலிருந்து ஐம்பது லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. (மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம்) பத்து லட்சத்திலிருந்து இருபது லட்சம் (மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம்)

3. மாவட்ட குறைதீர்க்கும் நீதி மன்றத்திலிருந்து மாநில ஆணையத்திற்கு மேற்கண்ட வரையரைக்குட்பட்டு மாவட்ட நீதி மன்ற உத்தரவு பிறப்பித்த நாள்முதல் 30 நாட்களுக்குள் மேல் முறையீடு செய்ய வேண்டும்(இருப்பினும் காலவரையறைக்கு உட்பட்டு மேல் முறையீடு செய்ய இயலாமல் போனதற்கு போதிய காரணம் காட்டி நீதி மன்றம் திருப்திப்பட்டால்காலம் கடந்து மேல் முறையீடு செய்ய அனுமதி வழங்கலாம்).

4. அதே போன்று மாநில ஆணையத்திலிருந்து தேசிய நுகர்வோர் ஆணையத்திற்கும் மேல் முறையீடு செய்ய மேலே கூறப்பட்ட விதி பொருந்தும்.

5. புதிய சட்டப்படி அனுவசியமானதும் தொல்லைதரக் கூடியதுமான, அல்லது அற்பத்தனமான புகார்களைத் தள்ளுபடி செய்வதும் வழக்குச் செலவினையும் பத்தாயிரம் ரூபாய்க்கு மிகாமல் அபராதமும் விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

6. எதிர் மனுதார், அல்லது மனுதார், நுகர்வோர் மன்ற ஆணையின்படி செயல்பட மறுத்தாலோ அல்லது தவறினாலோ அவருக்கு ஒரு மாதத்திலிருந்து மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாயிலிருந்து பத்தாயிரம் ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக அளிக்கப்படலாம்.

மேல் முறையீடு :-

1. மாவட்ட நுகர்வோர் தீர்ப்பாயத்திலிருந்து மேல் முறையீடு செய்ய, மாநில நுகர்வோர் ஆணையத்திற்கு, மாவட்ட தீர்ப்பாயத்தின் தீர்ப்பு வழங்கிய நாளிலிருந்து. முப்பது நாட்களுக்குள் மேல் முறையிட்டு மனுச் செய்ய வேண்டும்.

2. அதே போல் மாநில நுகர்வோர் ஆணையத்திலிருந்து தேசிய நுகர்வோர் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ய காலஅவகாசம் 30 நாட்களே.

சேவை :-

நுகர்வோர் சட்டத்தின் படி, சேவைக்குறைபாட்டிற்கு எதிராக நுகர்வோர் வழக்கு தொடரமுடியும் என்ற அடிப்படையில்

1 பொது நல சேவை (Public Welfare Service)

2. அறநிலைச் சேவை (Charitable Service)

3. கல்வி அறச் சேவை(EducationalService)

4. தொழிலியல் சேவை (Professional Service)

5. தனித்திறன் சேவை (Service by Personal Skill)

6. அரசுத் துறையின் சேவை (Service by Government Departments)

இது போன்ற சேவையின்பால் ஏற்படுகின்ற குறைபாட்டினை நிவர்த்தி செய்ய, நுகர்வோர் வழக்கு தொடர்கின்றனர்.

மேற் கூறியுள்ள 1 முதல் 3 மற்றும் 6 ஆகிய சேவை குறைபாடுகள் தொடர்பாக தீர்வழிகள் காண அவைகளுக்கென தனித்தனி அமைப்புகள் இருந்த போதிலும், இவைகள் குறித்து நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றங்களில் தவறுதலாக வழக்குத் தொடர

Scanned with CamScanner

கின்றனர், இருப்பினும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் இது தொடர்பான வழக்குகளும் தீர்க்கப்படுகின்றன.

மேற்கண்ட 4வது சேவையைப் பொறுத்தளவில், மருத்துவர்களின் சேவைக்கு இது ஒரு சவாலாக அமைந்துள்ளது.

முடிவுரை :-

நாளொரு வியாபாரமும் பொழுதொரு விளம்பரமும் பெருகிவரும் இன்றைய நவீன விற்பனை உலகில், ''ஒரு பொருள்வாங்கினால் ஒரு பொருள் இலவசம்'', ''இலவச பரிசுத் திட்டம்'', '' பாதிப் பணம் கட்டினால் முழுத் தொகைக்கு உண்டான பொருள்''. இவ்வாறாக, வாடிக்கையாளர்களுக்கு கவர்ச்சியை உண்டாக்கி, பொருளின் விலையை ''மலிவு'' ஆக்குவதற்குப் பதிலாக, ''மலிவான'' விற்பனை நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், வாடிக்கையாளர்கள் விழிப்புணர்வு கொள்ள வேண்டும். முன்னுரையில் கூறியது போல '' வாங்குபவரே '' விழிப்புடன் இருக்க வேண்டும்.

வாங்குபவர்கள் விழிப்படையத் தேவையான அம்சங்கள் :-

